பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 09 2026 SUNDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியா-சீனா இடையேயான எல்லை பிரச்சனைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பது என இருநாடுகளின் தலைவர்களும் முடிவு செய்துள்ளனர்.
- கியூபா வெளியுறவு அமைச்சருடனான இருதரப்பு பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமானதாக இருந்தது என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- அவசர நிலையை எதிர்கொள்ளும் வகையில் சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.
- சிலியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்டுள்ள தீ விபத்தில் 16 உயிரிழந்துள்ளனர்.
- ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

---------------

இந்தியா-சீனா இடையேயான உறவுகளை மேம்படுத்துவது என்ற இருநாடுகளின் தலைவர்களும் முடிவு செய்துள்ளனர்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் இடையே பிரதமர் திரு நரேந்திர மோடி சீன அதிபர் திரு. Xi Jinping-குடன் பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது, இவ்விரு நாடுகளுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகள் மோதலாக உருவெடுக்காமல் தவிர்ப்பது என வேண்டும் என்று ஒப்பு கொண்டனர்.

பரஸ்பர மரியாதை, நலன்கள் உள்ளிட்ட அம்சங்களின் அடிப்படையில் இருநாடுகளும் செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் எடுத்துரைத்தார்.

எல்லைப் பகுதியில் அமைதியை பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் பரஸ்பரம் இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் தீர்வுகாணப்பட வேண்டும் என்று இருதலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

இந்த உச்சிமாநாட்டின் நிறைவுநாளான இன்று மீள்திறன், புத்தாக்கம் மற்றும் நிலத்தன்மை குறித்து பிரிக்ஸ் நாடுகள் விவாதிக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து, பிரதமர் திரு நரேந்திர மோடி, கஜகஸ்தான், பிலிப்பைன்ஸ், எகிப்து, தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

---------------

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக, இந்தியா வந்துள்ள ஈரான் அதிபர் திரு மசூத் பெசஷ்கியான், நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

மேற்கு ஆசியாவில், அண்மையில் ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் குறித்து, இரு தலைவர்களும் பரஸ்பரம் தங்களது கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அனைத்துப் பிரச்சினைகளும் பேச்சுவார்த்தை மற்றும் தூதரக நடவடிக்கைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டைப் பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், அப்பகுதியில் நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல், தடையற்ற வர்த்தகக் கப்பல் போக்குவரத்தை உறுதி செய்தல், மாலுமிகளின் பாதுகாப்பு போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து அந்நாட்டு அதிபர் திரு மசூத் பெசெஷ்கியானிடம், திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

இதனையடுத்து, ஈரான் அதிபர் திரு மசூத் பெஷஸ்கியான்குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து பேசினார்.

---------------

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக, கஜகஸ்தான் அதிபர் திரு காசிம்-ஜோமார்ட் டோகாயேவ் நேற்று புது தில்லி வந்துள்ளார்.

தில்லி விமான நிலையத்தில் அவருக்கு மத்திய கல்வித் துறை இணையமைச்சர் திரு சுகந்த் மஜும்தார் வரவேற்றார்.

இந்தியா- கஜகஸ்தான் இடையே, வலுவான கலாச்சாரம் மற்றும் மக்கள் தொடர்பை அடிப்படையாகக் கொண்ட, வலுவான உத்திசார் நட்புறவை கொண்டுள்ளன.

---------------

வளரும் நாடுகளிடையேயான ஒத்துழைப்பு குறித்து, கியூபா வெளியுறவுத்துறை அமைச்சர் திரு புருனோ ரோட்ரிக்ஸ் பாரில்லா-வுடன் நடத்திய இருதரப்பு பேச்சுவார்த்தை, ஆக்கபூர்வமாக இருந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, இந்த சந்திப்பு நடைபெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் பயனுள்ள வகையில், தங்களது கருத்துகளைப் பரிமாறிக் கொண்டதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

---------------

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மூன்று நாள் பயணமாக மும்பை சென்றுள்ளார்.

அவரது இந்தப் பயணத்தின் போது, மும்பையில் உள்ள ஆசியடிக் சொசைட்டியைப் பார்வையிடுகிறார்.

பந்த்ரா-குர்லா வளாகத்தில் உள்ள பாரத் டைமண்ட் போர்ஸில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் அவர் பங்கேற்கிறார்.

பின்னர், லால்பாக்சா ராஜாவில் உள்ள விநாயகர் கோயிலில் வழிபடும் அவர், மும்பை ஆசியடிக் சொசைட்டியில், ஸ்ரீ கணேஷ் ஞானரதி என்று பெயரிடப்பட்டு, பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கையெழுத்துப் பிரதிகளின் கண்காட்சியை அவர் தொடங்கி வைக்கிறார்.

மேலும், அங்குள்ள நூலகத்த்திற்குச் சென்று, கையெழுத்துப் பிரதி பாதுகாப்பு ஆய்வகத்தின் பணிகளை அவர் ஆய்வு செய்கிறார்.

நாளை நவி மும்பை, செல்லும் திரு அமித் ஷா, வாஷியில் உள்ள சிட்கோ கண்காட்சி மையத்தில், இந்தி மொழியை மையமாகக் கொண்ட ஆறாவது அகில பாரதிய ராஜ்பாஷா மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

---------------

சீனாவின் குவாங்சோ நகருக்கும் - புதுதில்லிக்கும் இடையேயான வழக்கமான பயணிகள் விமான சேவைகள், இம்மாதம் 21-ம் தேதி முதல் மீண்டும் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2020 -ம் ஆண்டில் கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காலத்தில், இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான விமான சேவைகள் நிறுத்தப்பட்டன.
இதன் மூலம், ஆறு ஆண்டுகால இடைவெளி முடிவுக்கு வந்துள்ளது.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக, சீன அதிபர் திரு ஜி ஜின்பிங், இந்தியா வந்துள்ள நிலையில், இந்த அறிவிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், இந்தியாவின் இண்டிகோ நிறுவனம், ஷாங்காய் - கொல்கத்தா இடையே, தினசரி விமானச் சேவைகளைத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

---------------

இந்தியா - ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி இடையேயான ஒத்துழைப்பு, எதிகாலத்தில் வலுவடைவதற்கான வாய்ப்புகள் குறித்து அந்த வங்கியின் தலைவர் திரு Zou Jiayi -யுடன் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, போக்குவரத்துத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து விவாதிக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

--------------

நாட்டின் பாதுகாப்பிற்குப் பொது சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

*ஆந்திரப் பிரதேச மாநிலத்தில், அரசு மருத்துவமனையில் பத்து தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் பன்னிரண்டு ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்களை திறந்து வைத்து அவர் பேசினார்.*

*தீவிர சிகிச்சை வழங்குவதற்கும், நோய்ப் பரவலை முன்கூட்டியே கண்டறிவதிற்கும், மருத்துவமனையின் செயல்திறனை இந்தப் புதிய வசதிகள் மேம்படுத்தும் என்று அவர் கூறினார்.*

*வழக்கமான சுகாதாரச் சேவைகளைப் பாதிக்காத வகையில், அவசரநிலைகளை எதிர்கொள்ளக்கூடிய சுகாதாரக் கட்டமைப்பின் அவசியத்தை கோவிட்-19 பெருந்தொற்று உணர்த்தியதாக அவர் குறிப்பிட்டார்.*

*இதனைக் கருத்தில் கொண்டு, பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்புத் திட்டம் தொடங்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*இத்திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 631 தீவிர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*

*ஆந்திரப் பிரதேசத்தில், 606 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 24 தீவிர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.*

*மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே, விரிவான ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்குவதற்காக, நாடு முழுவதும் ஒரு லட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் சுகாதார மையங்கள் ள் நிறுவப்பட்டுள்ளதாக திரு. நட்டா தெரிவித்தார்.*

---------------

*சத்தீஸ்கர் மாநிலம் ராய்கரில், எஃகு கழிவகளைக் கொண்டு உலகின் மிக நீளமான சாலை அமைக்கப்பட்டுள்ளதன் மூலம், இந்தியா கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளது. இதற்கான அங்கீகார விழா புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.*

*இந்த விழாவில் பேசிய, மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், எஃகு கழிவுகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள சாலை, வழக்கமான தார் சாலைகளை விட நான்கு மடங்கு அதிக வலிமையை அளிப்பதுடன், சாலை அமைப்பதற்கான செலவை 40 சதவீதம் வரை குறைக்கும் என்று கூறினார்.*

---------------

*கழிவிலிருந்து செல்வம் என்ற மறுசுழற்சி முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு வலுசேர்க்கும் வகையில் முன்னுரிமைகளை இத்திட்டம் அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.*

---------------

*சிலியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்டுள்ள தீ விபத்தில் 16 உயிரிழந்துள்ளனர்.*

*அந்நாட்டு தலைநகர் சாண்டியாகு நகரின் தென்பகுதியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

இந்த மருத்துவமனையில் 26 -க்கும் அதிகமான மூத்த குடிமக்கள் உற்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாகவும் அவர்களில் 10 பேர் மீட்கப்பட்டு, அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த அந்நாட்டு அதிபர் திரு. Jose Antonio Cast உத்தரவிட்டுள்ளார்.

---------------

குஜராத் மாநிலத்தில் ஓரிரு இடங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், சௌராஷ்டிரா, கட்ச் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு சில இடங்களில கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

---------------

ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

சீனாவின் Hulunbuir நகரில், இப்போட்டி, பிற்பகல் 2.00 மணிக்குத் தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<